# பேரிடரில் முதல் நிலை மீட்பாளர்களுக்கான பயிற்சி கையேடு



## மாவட்ட அளவிலான மூன்றாம் நிலை ஒரு நாள் பயிற்சி

**தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை**

**எழிலகம் இணைப்பு கட்டிடம், 5-வது தளம், சேப்பாக்கம், சென்னை – 05.**

# பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | மீட்புப்பணிகள் | 1 – 10 |
| 2. | கிராம பேரிடர் மேலாண்மைத் திட்டம் | 11 – 16 |
| 3. | பணிக்குழுக்களுடனான ஒருங்கிணைப்பு<br>(Co-ordination with Line Department) | 17 – 19 |

# 1. மீட்புப் பணிகள்

- மீட்பு பணி நாம் நினைத்து பார்க்காத அசாதாரண சூழ்நிலைகளில் நடைபெறும் பணியாகும். விபத்தில் காயம்பட்டவர்களை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் முறைகள் விபத்து மற்றும் அதில் காயம் அடைந்தவர்களின் பாதிப்புகள் பொருத்து இருக்கும். சில மீட்பு நடவடிக்கைகளில் உயரமான மாடி கட்டிடங்களிலிருந்து விபத்துக்குள்ளானவர்களை கீழே இறக்க வேண்டும். மற்ற அறைகளில் உள்ள ஓட்டைகளின் வழியாகவோ அல்லது கீழ் தரையில் இருந்தோ சில நுட்பமான அணுகுமுறைகள் மூலம் அகற்ற வேண்டும். காயம் அடைந்தவர்களை கையாளப்படும் போது காயங்கள் இன்னும் அதிகமாகாமல் கவனமாக பார்த்து கொண்டு அவர்களை அங்கிருந்து அகற்ற வேண்டும்.
- அபாயகரமான சூழலில் இருந்து அவசரமாக வெளியேற்றப்பட்டாலும் கூட, முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு அம்சங்களை அறிந்து கையாள வேண்டும். விபத்துகள் மற்றும் காயங்களின் நிலை மற்றும் சாத்தியமான சூழ்நிலைகளை கவனமாக மதிப்பீடு செய்வதுடன் மேலும் கண்ணுக்கு தெரியாத பொருட்களால் கூடுதல் சேதங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதா என்று ஆராய வேண்டும்.
- அதிக காயம்பட்டவர்களை ஆம்புலன்ஸ் மற்றும் முதலுதவி சேவை மையங்களின் ஒப்படைக்கும் பொழுது அவர்களை கொண்டு செல்லும் வழிகளில் உள்ள குப்பை குவியல்களையும், மேடு பள்ளமான நிலபரப்பை தாண்டி செல்ல வேண்டி வரும் அப்போது கவனமாகவும், பாதுகாப்பாகவும் காயம்படாதவாறு கையாள வேண்டும்.
- பாதிக்கப்பட்டவர்களின் காயங்கள் மற்றும் சூழ்நிலைகளில் அங்கு கிடைக்க கூடிய உபகரணங்களை நிலைபாட்டைப் பொறுத்து மீட்புப் பணி நடைபெறுகிறது. மீட்புப் பணியில், தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் இறந்தவர்களையும், சாதாரணமாக உள்ளவர்களை காயம்பபட்டவர்களைப் போல் பாவித்து செய்யும் போது குழுவினருக்கு மனதளவில் தன்னம்பிக்கையும் வரும். வழிகாட்டுதல்களை நன்கு புரியும்படி கற்றுக்கொடுக்க வேண்டும். அவசர காலநேரங்களில் முடிவுகளை உடனடியாக தீர்மானிக்கவும். பல்வேறு குழுக்களில் குழு உறுப்பினர்கள் புரிந்து கொள்ளும் வகையிலும் பயிற்சி அளிக்க வேண்டும். அது மட்டுமின்றி மீட்பு பணியாளர்கள் காயம்பட்டவர்களை நெடுதூரம் எடுத்த செல்ல தகுதியுடையவர்களாக பயிற்சிகள் வழங்க உருவாக்க வேண்டும்.

**உபகரணங்கள் அல்லாத மீட்பு நடவடிக்கை:-**

இந்த பாடம் இரண்டு தலைப்புகளின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

(a) ஒரு மீட்பாளர் கையாளும் நுட்பங்கள்.

(b) இரு மீட்பாளர்கள் கையாளும் நுட்பங்கள்.

பின்வரும் நுட்பங்கள் அவசர சூழ்நிலையில் பயன்படுத்தவும், தீவிரமாக காயம் அடைந்தவர்களை ஸ்ட்ரெச்சரில் வைத்து எடுத்து செல்ல வேண்டும் என்பதையும், தீ விபத்து அல்லது கட்டட வீழ்ச்சி (Collapsed Building) போன்ற அபாயங்களில் முதலில் சம்பவ இடத்திலிருந்து காயம்பட்டவர்களை அகற்ற வேண்டியது முக்கியமான பணியாகும். சில சந்தர்பங்களில் உயிர்காக்க தொடர்ச்சியாக முதலுதவி கொடுப்பதற்கு முன் இந்த செயல்களை செய்ய நேரிடும்.


**Single Rescuer Tecniques:-**

Single rescure Human Crutch (ஊன்றுகோலாக)



இவ்வேலையை செய்ய இந்த முறையை பொறுத்த வரையில் உயிர் தப்பியோடும் நபர்களுக்கு சில உதவிகளை வழங்குவதற்கு தீவிரமாகவும் திறமையுடனும் இருக்க வேண்டும். கீழே உள்ள படத்தில் Single Rescuer எவ்வாறு மனித ஊன்று கோலாக பாவிக்க வேண்டும் என்பதை காட்டுகிறது. மீட்பாளரின் கரங்களில் நிலைப்பாட்டை கவனிக்க வேண்டும். ஒரு கையால் விபத்துக்குள்ளானவரின் வலது கையின் மணிக்கட்டிலும் மற்றொரு கையினால் அவரின் இடுப்பு பகுதியில் உள்ள உடைகளை பிடித்து கொள்ள வேண்டும். விபத்துக்குள்ளானவரின் உடல் காயம் உள்ள பக்கத்தை மீட்பதற்கு மிக அருகில் இருந்து அவருக்கு உதவ வேண்டும்.

## PICK A BACK





முறையாக மேற்கொள்ளும் போது இது ஒரு சிறந்த முறையாகும். விபத்துக்குள்ளானவர் தூக்குபவரை விட பாரம் குறைவாக தான் இருப்பார். காயம் அடைந்தவரை இடுப்பு மீது மீட்பாளர் தூக்கும் போது அவருக்கு காயங்கள் எங்கெங்கு இருக்கிறது என உறுதி செய்ய வேண்டும். முழுவதுமாக தூக்கும் போது மூச்சு திணறல் ஏற்படா வண்ணம் தூக்க வேண்டும்.

## Fine Fignter Crawl:-



தீ மற்றும் புகை மூட்டமாக உள்ள ஒரு கட்டிடத்தில் இருந்து அதில் பாதிக்கப்பட்டவரை தனி ஒருவராக அப்புறப்படுத்தும் முறை - கீழே உள்ள படத்தில் காண்பிக்கப்பட்டுள்ள படி தீ எரியும் கட்டடத்தில் இருந்து வெளியேறும் போது மீட்பவர் மற்றும் விபத்துக்குள்ளானவரின் தலைகள் கீழ்நோக்கி தாழ்வான பகுதியில் இருக்க வேண்டும். ஏனென்றால் அப்பகுதியில் தான் தெளிவான மற்றும் குளிர் தெளிவான மற்றும் குளிர்ச்சியான காற்று இருக்கும். மேலும் விபத்துக்குள்ளானவரின் முழு எடையும் மீட்பாளரின் மீது இருக்காது. மேலும் காயம் அடைந்தவர்களின் காயம் மேலும் காயம் ஆகாமல் இருக்க மீட்பாளர் கை, தோள்பட்டை, தலை, காயம்பட்டவரின் கரங்கள் படத்தில் இருப்பது போல் இருக்க வேண்டும். மீட்பாளரின் கை காயம்பட்டவரின் தலையை தாங்கி கொள்வதற்கு உதவுவதோடு இழுப்பதனால் ஏற்படும் காயங்கள் தவிர்க்கப்படும்.

**Removal Down stain Method:-**



- ஒரு பெரிய விபத்தில் உள்ளவரை மாடியிலிருந்து கீழே இறக்கி மீட்கும் முறை. இந்த நேரத்தில் மீட்டெடுப்பவர் பாதிக்கப்பட்டவரை முதுகில் சுமந்து செல்லுதல் அல்லது பிற முறைகளை பயன்படுத்தி படிகளில் இறங்க முடியாது. இது போன்ற சமயங்களில் பயன்படுத்தப்படும் இந்த முறையை மாடிப்படிகளில் கொண்டு வருவதற்கு மட்டும் பயன்படுத்துவதோடு நிறுத்திக்கொள்ள கூடாது.
- பாதிக்கப்பட்டவர் கட்டிடத்தில் படுத்து இருந்தால் முதலில் Triangular Bandage அல்லது துணியை கொண்டு இரண்டு கைகளிலும் மணிக்கட்டு வரை கட்ட வேண்டும். மேலும் பாதிக்கப்பட்டவரின் தலை பக்கத்தில் இருந்து அவரை தூக்கி அமர வைக்க வேண்டும். பின்பு அவரின் பின் பக்கமாக இருந்து பாதிக்கப்பட்டவரின் கட்டப்பட்ட மணிக்கட்டில் அருகில் இரண்டு கைகளால் பிடித்து தூக்க வேண்டும். மாடிப் படிகட்டின் வழியாக செல்ல வேண்டுமென முடிவெடுத்துப் பின்பு அதிக வலிமையுடன் இழுத்து செல்ல வேண்டும். அப்போது பாதிக்கப்பட்டவரின் உடல் பகுதியை தாங்கி பிடித்து கொள்ள முன்னங்கால் பயன்படுத்தி ஒவ்வொரு படியாக இறங்கும் போது ஒரு முறை தளர்த்தி மற்றொரு காலால் தாங்கி பிடிக்க வேண்டும். மேலும் மாடிப்படிகளுக்கு அருகில் இருக்கும் வழுவான சுவர்களை நினைவில் கொண்டு பின்புறமாக அவரை மீட்க வேண்டும்.


**இரண்டு மீட்பாளர் நுட்பங்கள்:- Two Rescuer Human Crutch**

கீழே உள்ள படத்தில் காணும் முறையானது ஒரு மீட்பவரை ஊன்று கோலாக பயன்படுத்துவதை போன்றது, ஆனால் இதில் பாதிக்கப்பட்டவரை இருபுறமும் தாங்கி பித்து அவரின் கைகளை தோள் மேல் போட்டுக் கொள்வதோடு மற்றொரு கையால் அவரின் பின்புறம் உள்ள அவரின் உடலை எதில்- எதிர் பக்கமாக பிடித்து அழைத்து செல்ல வேண்டும்.



**Two Handed Seat :-**

பாதிக்கப்பட்டவர் உட்கார்ந்து இருக்கும் நிலையில் மீட்பாளார்கள் இருபுறம் மண்டியிட்டு முழுங்காலுக்கு கீழே ஒரு கையை வைக்க வேண்டும். இவ்விரு கைகளின் மணிக்கட்டிகளில் இருக்கமாக பிடித்துக்கொள்ள வேண்டும். மற்றொரு கையை பாதிக்கப்பட்டவரின் முதுகுக்கு பக்கமாக இரு கைகளை கோர்த்து அவரை தூக்கி செல்ல வேண்டும். அப்போது அந்த குழுவின் தலைவர் தூக்குவதற்கும், நடப்பதற்கும் ஆன கட்டளைகளை கொடுக்க வேண்டும்.



(a)




(b)

## Three Handed Seat:


இந்த முறையானது மீட்புக்கு நல்ல ஆதரவாகவும், நியாயமான முறையில் வசதியாகவும் இருக்கவும், இது இரண்டு மீட்பு குழுவினரின் கைகள் உறுதியாகவும் இருக்க பயன்படுகிறது.

இரு முதல் மீட்பாளர் தனது இடது கையின் மணிக்கட்டில் வலது கையால் பிடித்துக்கொண்டு, இடது கையினால் இன்னொரு இரண்டாம் மீட்பாளரின் ஒரு கையின் மணிக்கட்டை பிடித்து கொள்கிறார். அவர் முதல் மீட்பாளரின் வலது கையினால் மணிக்கட்டை பிடித்து ஒரு இருக்கை போல் அமைத்து அதில் பாதிக்கப்பட்டவரின் Buttock -ல் கொடுத்து தூக்க வேண்டும். கீழே இருக்கும் படத்தில் இருப்பது போல




## Four Handed Seat:


இரண்டு மீட்பாளரும் தனது இடது மணிக்கட்டினை இருக்க பிடித்து உருவாக்கும் இருக்கை அமைப்பு ஆகும். அது பாதிக்கப்பட்டவரை வசதியாக தூக்கி செல்லவும், மீட்பாளருக்கு குறைவான சுமையாகவும் இருக்கும். இந்த கோணங்களில் பாதிக்கப்பட்டவர் போதுமான சுயநினைவோடு மீட்பாளர்களை இருக்க பிடித்துக் கொள்ள வேண்டும்.




## The Four and Aft Method :-

இது மிகவும் எளிதான வழி அதில் இரண்டு மீட்பாளர்கள் மயக்க நிலையில் உள்ள ஒரு பாதிக்கபட்டவரை கையாளுதல்.

பாதிக்கப்பட்டவரை மாடியில் இருந்து தூக்கிக் கொண்டு செல்லும் முறை அப்பொழுது அவரது மணிக்கட்டுகளை ஒன்றாக கட்டவேண்டும். முதல் மீட்பாளர் பாதிக்கப்பட்டவரின் பின் பகுதியில் செல்ல வேண்டும். பின்பு குனிந்து அவரின் முழுங்கால்களுக்கு அடியில் பிடித்து தூக்க வேண்டும். அப்போது அதற்கு உண்டாக கட்டளைகளின் படி தூக்கி, இறக்க வேண்டும். ஒருவேளை காயம்பட்டவரின் கால்களில் காயம் இருந்தால், இரு கால்களையும் குறுக்காக ஒரே பக்கமாக படத்தில் இருப்பது போல் போட்டு மீட்பாளர் ஒரு பக்கமாக இருந்து தூக்கி செல்ல வேண்டும்.





## The Four - Rescuer Techniques:-

முதுகுத் தண்டு அடிபடாத பொழுது, நான்கு பேர் கொண்ட மீட்பு குழுவினர் எவ்வாறு ஸ்டெரச்சர் பயன்படுத்த வேண்டும் என்பதை பற்றி விபரம் பின்வருமாறு:


- காயம்பட்டவரின் தலை அல்லது காலுக்கு அருகாமையில் ஸ்டெரச்சர் தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.
- அணித்தலைவரின் உத்தரவின் படி 03 மீட்பு குழுவினர் காயம்பட்டவருக்கு ஓர்புறம் மண்டியிட்டு இருக்க வேண்டும். பிறகு ஒரே விதமாக காயம்பட்டவரின் தலைக்கு அருகில் நெருங்கி இருக்க வேண்டும்.
- குழுத்தலைவர் மீட்பு குழுவினருக்கு எதிர் முனையில் காயம்பட்டவரின் இடுப்புக்கு அருகில் மண்டியிட வேண்டும்.
- காயம்பட்டவரின் மூன்று பக்கங்களின் மீட்பு குழுவினர் தங்கள் கைகளை வைக்க, அணித்தலைவர் காயம்பட்டவரை அவர்கள் கைகளில் ஏற்றி விட வேண்டும்.
- தலைவரின் உத்தரவுக்கு மற்ற மூன்று மீட்பு குழுவினரும் காயம்பட்டவரைத் தூக்க வேண்டும்.
- மீட்பு குழுவினர் காயம்பட்டவரை தங்கள் முட்டி அளவிற்கு உயர்த்தி முட்டியோடு தாங்கி பிடிக்க வேண்டும். அணித்தலைவர் ஸ்டெச்சரை காயம்பட்டவருக்கு அடியில் வைக்க வேண்டும்.

- கடைசியில் கொடுக்கப்படும் கட்டளைகள்: கீழே இறக்க தயாராகுதல், கீழே இறக்கி வைத்தல்.
- மூன்று மீட்பு குழுவினரும் அணித்தலைவர் உத்தரவின் படி காயம்பட்டோரை ஸ்டெரச்சர் இறக்கி வைக்க வேண்டும்.




**Blanket Lift: - நான்கு அல்லது ஆறு**

- Blanket Lift என்பது ஒரு குறுகலான இடத்தில் இருந்து காயம்பட்டவரை தூக்கி அல்லது நகர்த்த பயனுள்ள முறையாகும்.
- ஒரே ஒரு போர்வையை பயன்படுத்தி ஒரு ஸ்டெரச்சர் (Stretcher) தயார் செய்து கொள்ள வேண்டும்.
- போர்வையை நீளவாக்கில் அதன் அகலத்தில் பாதி அளவு நீளம் உருட்டவும்.
- மீட்பு பணியில் ஈடுபடும் இருவர் அல்லது மூவர் காயம்பட்டவரின் இருபுறமும் மண்டியிட வேண்டும். காயம்பட்டவரை ஒரு புறமாக திருப்பி போர்வையில் நடுவே படுக்க வைக்க வேண்டும்.
- சுற்றி வைக்கப்பட்ட போர்வையில் காயம்பட்டவரை திருப்பி போர்வையின் நடுவே படுக்க வைக்க வேண்டும்.
- காயம்பட்டவருக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக சேதமடைந்த உடலுக்கு நெருக்கமாக போர்வையை கொண்டு போர்த்தி கொள்ளுதல் வேண்டும்.
- வழி நடத்தி செல்பவரின் உத்தரவிற்கு, காயம்பட்டவரை ஸ்டெரச்சர் கொண்டு இடுப்பு உயரத்திற்கு தூக்க வேண்டும்.
- வழி நடத்தி செல்பவரின் உத்தரவிற்கு காயம்பட்டவரை ஸ்டெரச்சர் உடன் கீழே இறக்க வேண்டும்.



**Clothing Life:-**

- இது அவசர கால முறையாகும். காயம்பட்டவரை நெருகடியான சூழலின் போது மீட்க பயன்படுத்தப்படுகிறது.
- Blanket மூலம் ஸ்டெச்சர் தயார் செய்து காயம்பட்டவரின் அருகில் வைக்க வேண்டும்.
- சுயநிலை இல்லாத காயம்பட்டவரின் கைகளை முக்கோண கட்டு துணி கொண்டு கட்ட வேண்டும்.
- காயம்பட்டவரை திருப்பி துணியின் நடுவில் படுக்க வைக்க வேண்டும்.
- காயம்பட்டவருக்கும் ஒரு புறம் மீட்பு படையினரும் மறுபுறம் ஸ்டெரச்சரில் வைக்கப்பட்டுள்ளது.
- சாதரண கட்டளை வார்த்தைக்கு ஒன்று போல் தூக்கி ஸ்டெரச்சரில் படுக்க வைக்க வேண்டும்.



**Specialist Lifting / Loading Devices:-**


தூக்க / ஏற்ற / அதற்கு சிறந்த சாதனங்களான மரத்துண்டு அல்லது செயற்கை ஸ்பைனல் போர்டு ஸ்கூப் ஸ்டெரச்சர் மற்றும் முதுகு தண்டுவடம் நகராத உறுதியான சாதனங்கள் மீட்பு உபகரணம் வழங்குபவரிடர் உடனடியாக கிடைக்கும். உற்பத்தியாளரது விபர குறிப்பு அல்லது பரிந்துரையின் படி இந்த சாதனங்களை பயன்படுத்தவும்.

## Lashing the Patient to the Structure :-

- ❖ பல சந்தர்ப்பங்களில், கடினமான இடங்களில் காயம்பட்டவர்களை பாதுகாப்பாக கையாள இந்த வகை பயன்படுத்தப்படுகிறது. எந்த ஒரு கடுமையான அல்லது அவசர சூழலில் காப்பாற்றும் போது யாரேனும் இறந்த போகாமல் இருக்க முடியாது. ஆயினும் சந்தேகமாக இருந்தால் மீட்பு தன்மைக்கு பதில் அளிக்க வேண்டும். ஸ்டெச்சரில் கட்ட பயன்படுத்தபடும் கயிற்றின் அளவு சுமார் 12 மி.மீ அல்லது 11 to 12 மிமீ இருக்க வேண்டும்.
- ❖ ஸ்டெச்சர் கட்டுவதற்கு முதல் ஒரு பக்க கட்டையில் Figure of Eight Loop போட வேண்டும் பின் D முறையில் மூன்று Half Hitch நோயாளியின் மீதும் Structure மீதும் போட வேண்டும்.

    1. மார்பு பகுதியில்
    2. இடுப்பு பகுதியில்
    3. முட்டிப் பகுதியில்

- ❖ முதலில் இரண்டு காலின் பாதத்தையும் வட்டமாக சுற்றி விட்டு பிறகு இந்த மூன்று முடிச்சுகளையும் நோயாளி படுத்திருக்கும் பகுதிக்கு எதிர்புறம் வருமாறு கட்ட வேண்டும். இறுதியாக உள்ள முனையின் Structure –ன் மேல் முனை கைப்பிடியில் கட்ட வேண்டும்.
- ❖ மேலே கட்டப்பட்ட Half Hitch மூன்றில் ஏதேனும் உடலில் ஏற்பட்ட காயத்தினை அழுத்தினால் அதனை அதற்கு மேல் அல்லது கீழே கட்டலாம். பெண்களின் மார்பு பகுதியில் கட்டும் கட்டினை அதன் கீழ் அல்லது மேல் புறம் கட்டுவது கவனிக்கதக்கது.
- ❖ Structure உருவாக்கும் போது கட்டைகளில் கீழே கல் அல்லது மரகட்டைகளை வைத்து அதன் பின் Structure உருவாக்கினால் மிகவும் சுலபமாக இருக்கும்.



## 2. கிராம பேரிடர் மேலாண்மைத் திட்டம்

### பேரிடர்கள் குறித்த முந்தைய கால அனுபவங்களை தெரிந்து கொள்ளுதல்

பேரிடரிலிருந்து மக்கள் தம்மைக் காத்துக் கொள்வதற்குப் பேரிடர் பற்றிய அறிவும், அதைச் சமாளிக்கும் திறன்களும் பெற்றிருக்க வேண்டும. மக்களைப் பாதிக்கும் ஏராளமான பேரிடர்கள் உள்ளன. அவை அனைத்தைப்பற்றியும் முழுமையாகத் தெரிந்திருக்க வேண்டும் என்றத் தேவையில்லை, மாறாக,, மிகச் சிறந்த பேரிடர் மேலாண்மைக்கு அவர்கள் தங்களைத் தாக்கும் மீண்டும் மீண்டும் பேரிடர்களைப் பற்றி அறிந்திருந்தாலே போதுமானதாகும். இதற்கு முன் எந்த விதமான பேரிடர்கள் தங்கள் பகுதியை அச்சுறுத்தியது / தாக்கியது அதன் தாக்கம் எந்த விதமான விளைவுகளை ஏற்படுத்தியது அதன் தீவிரம். அது ஏற்படும் இழப்புகளின் எண்ணிக்கைகள் முதலியவற்றைக் கொண்டு முடிவு செய்ய வேண்டும்.

### கிராமத்தின் பேரிடர் மேலாண்மை திட்டம் தயாரித்தல்

சமுதாயத்தோடு தொடர்பு ஏற்படுத்தலில் அடுத்தக் கட்டம் சம்பந்தப்பட்டக் கிராமத்தின் வளங்கள் குறித்த வரைபடத்தை உருவாக்கல் ஆகும். இதில் கிராமத்தின் எல்வைகள் குறிக்கப்படுவதுடன் அதன் இயற்கைவளங்களும் குறிக்ப்பட வேண்டும். கிராமத்தின் சாலைத்தொடர்புகள், குடிநீர்வசதி அமைப்புகள் குடியிருப்புகள் வீட்டு வகைகள், பாலின, வயது பிரிவினை அடிப்படையில் கிராம மக்கள்தொகை விபரம் நிலப்பயன்பாடு, தகவல் தொடர்பு ஏற்பாடுகள், பொதுச்சொத்துகள், போன்ற அனைத்துவித விபரங்களும் படஉருவில் உருவாக்கப்படவேண்டும். பின்னர் தேவைப்படும் பயன்பாட்டிற்காக விபரங்கள் குறியீடுகள் மூலமாகவும் எழுத்து மூலமாகவும் குறிக்கப்பட வேண்டும். வரைப்படத்தின் முன் தயாரிப்புகள் தரையில் மக்கள் பங்கேற்புடன் உருவாக்கப்பட்டு பின்னர் தாளில் எடுத்தெழுதப்பட வேண்டும். வள வரைப்படம் மற்றும் பாதிப்புப் பகுதிகள்/ பாதுகாப்பு பகுதிகள் பற்றிய வரைப்படம் வரைவதற்கு முன் கிராமத்தில் அனைத்துப் பகுதிகளையும் நடந்து சென்று பார்த்து அந்தந்த பகுதி மக்களிடம் பாதிப்பிற்குள்ளாகும் இடங்கள் / பாதுகாப்பான இடங்கள், வழித்தடங்கள் வரைபடம் தயாரித்தல்.

கிராமத்தின் முந்தைய பேரிடர்கள் பற்றி அறிந்து ஏற்கனவே கிராமத்தை முன்னர் பாதித்த பேரிடர்களையும் அவை பாதித்த பகுதிகளையும் குறிக்கவேண்டும். பேரிடர் பாதிக்காத பகுதிகளையும் கட்டமைப்புகளையும் பாதுகாப்பான இடங்களாக வரைபடத்தில் குறிக்க வேண்டும். பேரிடர் நிகழ்வின் போது மக்கள் பாதுகாப்பாகத் திரும்பி வருவதற்கும் ஏற்ற வழித்தடங்கள் மற்றும் மாற்று வழித்தடங்களையும் வரைபடத்தில் குறிக்க வேண்டும். வழித்தங்களை அதிக பட்சமாக பயன்படுத்தும் எண்ணிக்கை, பாதுகாப்பான இடங்களில் தங்கும் இடத்தின் அளவு, அவற்றை அணுகும் பாதை வழிகள் முதலியவற்றையும் குறிக்க வேண்டும்.

**கிராமத்தை பேரிடர்கள் தாக்கும் வாய்புகளையும், பாதிப்புகளையும் நிர்ணயித்தல்**

பேரிடர் வரலாற்றை அறிந்து கடந்த காலங்களில் சம்பந்தப்பட்ட கிராமத்தை எந்த விதமான பேரிடர்கள் பாதித்துள்ளன என்பதை கண்டறிய வேண்டும் இதற்காக முந்தைய எழுத்து மூலமான பதிவுகளையும், அனுபவம் வாய்ந்த கிராம மக்களின் வாய்வழியாக கிடைக்கும் தகவல்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும. இப்பேரிடர்கள் எந்த அறிகுறிகளுடன் தோன்றின? என்ன முன்னெச்சரிக்கை சமிக்ஞைகளை வெளியிட்டன? எத்தனை முறைகள் ஏற்பட்டன? என்ன தீவிரத்துடன் தாக்கின. அதன் விளைவு என்ன? என்பது போன்ற தகவல்களைப் பெற்று அப்பேரிடர்கள் அந்த கிராமத்தை எவ்வளவு தீவிரமாக தாக்கியுள்ளன, அதை தணித்திட / தவிர்த்திட எந்தெந்த வகையிலான தயார்நிலை மற்றும் தணிப்பு முயற்சிகள் தேவை என இறுதி செய்ய வேண்டும்.

**பணிக்குழுக்களை முடிவு செய்தல்**

**செயல்முறைகள்**

1. பங்கேற்பாளர்களைக் கொண்டு சம்பந்தப்பட்ட கிராமத்தின் பேரிடர் வாய்ப்புகளை வரிசைப்படுத்தக் கூறவும். இதற்கு இக்கிராமத்தின் பேரிடர் வரலாறு விபரங்களைப் பயன்படுத்தவும்.

2. கிராமப் பேரிடர் வாய்ப்பு எண்ணிக்கைக்குக் தகுந்தவாறு பங்கேற்பாளர்களைக் குழுக்களாக பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பேரிடரைப் பற்றி விவாதிக்கக் கூறவும்.

3. ஒவ்வொரு குழுவும் தமக்குரிய பேரிடர் கிராமத்தைத் தாக்கும் போது ஏற்படும் விளைவுகளையும் அந்த விளைவுகளைத் தவிர்க்க / குறைக்க / தப்பிக்க மக்கள் என்னென்ன நடவடிக்கைளை எடுக்க வேண்டும் என பட்டியலிடக் கூறுக (உதாரணமாக இடம் கண்டு பிடித்தல், தண்ணீர் ஏற்பாடு செய்தல் போன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் வரிசைப்படுத்தவும்).

4. வரிசைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளைத் தம்முன் ஒன்றிற்கு ஒன்று தொடர்புள்ளது போல தோன்றுவனவற்றைத் தொகுத்து வகைப்பரிவுகளாக ஆக்கவும். இந்த வகைப்பிரிவுகளுக்கு அவற்றின் நடவடிக்களைப் பொறுத்துத் தகவல் குழு மீட்புக்குழு போன்று பெயரிடவும்.

5. சம்பந்தப்பட்ட கிராமத்திற்கு எத்தனைப் பணிக்குழுக்கள் தேவை என்பதை முடிவு செய்யவும், மொத்தத்தில் அனைத்து வகைப் பேரிடர்களுக்கும் தகவல் குழு, வெளியேற்றும் குழு, இருப்பிடக்குழு, முதலுதவி மற்றும் சுகாதாரக்குழு, மீட்புக்குழு, சேதமதிப்பீட்டுக் குழு, சடலம் அகற்றும் குழு, ஆற்றுப்படுத்தல் குழு போன்ற குழுக்கள் தேவைப்படலாம் என எடுத்துக்கூறவும்.

6. இக்குழுக்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட பணிகளையும் பொறுப்புகளையும் திறம்படச் செய்ய வேண்டியது அவசியம் எனவும், அதன் வழிகாட்டுதலின் கீழ் பாதிக்கப்படும் மக்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தவும்.

**கிராம பேரிடர் மேலாண்மை திட்டத்திற்கான வழிமுறைகள் (Preparation of Village Disaster Management Plan)**

தேவைப்படும் பொருள்கள்: தாள்கள், வரைபடத் தாள்கள், வண்ண எழுதுகோல்கள்

**வழிமுறை:**

1. பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவரிடமும் வெள்ளைத்தாள்களைத் தரவும்

2. ஒவ்வொருவரிடமும் தங்கள் கிராமம் அவர்கள் எட்டு அல்லது பத்து வயது சிறுவன் / சிறுமியாக இருந்த போது எப்படி இருந்தது என்பதை ஒரு படம் வரைந்து காட்டச் சொல்லவும்.
3. கிராமத்தின் இயற்கை அமைப்பு, பிரதான நில அடையாளங்கள் (கோயில், பள்ளி நிலப் பயன்பாடு முதலியவற்றை முக்கியமாக குறிப்பிடக் கூறவும்).
4. அதே போல் வரைப்படம் காலத்திற்கு தற்போதுள்ள காலத்திற்கும் இடையே, மக்கள் தொகை, தொழில்கள், வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், இயற்கை அமைப்பு, உணவு முறை போன்றவற்றின் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் குறிப்புகளாகக் குறிக்க கூறவும்.
5. இவற்றைச் செய்ய 20-30 நிமிட கால அவகாசம் தரவும்
6. கால அவகாசம் முடிந்தபின் அவரவர் தாளில் தமது பெயரை எழுதக்கூறி தாள்களை சேகரிக்கவும்.
7. வேறுபாடுகள் / வித்தியாசங்கள் அதிகம் காணப்படச்கூடிய 3 அல்லது 4 வரைப்படங்களைத் தேர்ந்தெடுத்து சம்பந்தப்பட்ட நபர்களை அழைத்து மற்றவர்களுக்கு விளக்கிக் கூறச் செய்யவும்.
8. இவ்வாறே அவரின் கிராமத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் எடுத்து கூறச் செய்யவும், மற்ற பங்கேற்பாளர்களின் சிறு கேள்விகளுக்கு விளக்கமளிக்கக் கூறவும் இவ்வாறே இதர வரைபடங்களுக்கும் வழி நடத்தவும்.
9. ஒவ்வொரு சமர்ப்பிப்பின் போதும், இன்னும் என்னென்ன விபரங்களை வரைப்படத்தில் கொண்டு வந்திருக்கலாம் என்பதையும் சாலைகள் போன்றவற்றை நேராக வரையாமல் உண்மைத் தோற்றத்திற்கு வரைவது நன்று என்பதையும், அடையாளங்களைப் பயன்படுத்துவதின் மூலம் விபரங்களை விளக்குவது எப்படி என்றும் விளக்கவும். வரைப்படத்தில் ஒவ்வொருவரும் மேற்கொண்டதால் நல்ல உத்திகளை எடுத்துக் கூறவும்.
10. கிராம மாற்றங்களை எடுத்துச் கூறியதின் மூலம் வரலாற்றை எப்படி நிரல்பட எடுத்துரைப்பது எளிது என்பதைக் கூறவும் தனது கிராமத்தைத் தவிர இதர கிராமத்தின் வரலாற்றைக் கண்டறிவதில் எந்தெந்த செய்திகள் குறித்து கேள்விகள் கேட்க வேண்டும். இத்தகவல்களை எந்த மாதிரியான நபர்களிடமிருந்து பெறமுடியும் என்பதையும் வினவவும்.

11. பிறகு தமிழ்நாடு மாநில வரைபட்த்தை வரைந்து ஒவ்வொருவராக அழைத்து அதில் ஆறுகள் பயிற்கள், குளங்கள், தேசிய நெடுஞ்சாலைகள், இரயில்தடங்கள், முக்கிய கோயில்கள், அருவிகள் போன்றவற்றை ஏதாவது குறிகளைக் கொண்டு குறிக்கக்கூறகவும், பிறகு இக்குறீயீடுகளை வரைபடத்தில் பக்கத்தில் விளக்கமுடன் எழுதக்கூறி அதன் பயன்பாட்டு எளிமையை எடுத்துக்கூறவும்.
12. அனைவரும் சேர்ந்து வரைபடம் வரைவது புதிரானதல்ல என்றும், அனைவராலும் வரைய முடியும் என்பதையும் எடுத்துக்கூறவும்.
13. பின்னர் ஒரு கிராமத்தின் வளவரைப்படத்தில் என்னென்ன அம்சங்கள் இருக்க வேண்டும் என்று பங்கேற்பாளர்களிடமிருந்தே வினவிப் பட்டியலிடவும். மேலும் இயற்கைவளம், மனிதவளம், கிராமத் தொடர்பு வசதிகள், பொது நிறுவனங்கள், மக்கள் அமைப்பு நிறுவனங்கள், மக்கள் தொகை போன்ற வகைப்பிரிவுகளின் கீழ் என்னென்ன விபரங்களைத் திரட்டமுடியும் என்பதையும் வினவிப் பட்டியலிடவும்.
14. கிராம வளவரைபடம் தயாரிக்கையில் ஈடுபடுத்தப்பட வேண்டிண மக்கள் பிரிவினரையும் அவர்களிடமிருந்து எந்தவிதமான தகவல்ள் கிடைக்கும் என்பதையும் நிர்ணயிக்கவும்.
15. பின்னர் பங்கேற்பாளர்களைக் கிராமத்திற்கு இட்டுச் செல்லவும் பங்கேற்பாளர்களைக் குழுக்களாகப் பிரிக்கவும் முதல் குழுவை கிராமத்தின் சாலைகள் மற்றும் பிரதான அடையாளங்கள், பொதுச் சொத்துக்கள், வீடுகள், நீர் நிலைகள் போன்றவற்றை வரையும் படியும், இரண்டாம் குழுவைக் குடும்பங்கள் ஜனத்தொகை, ஆண் பெண் குழந்தைகள் வகைப்பிரிவு கிராமப்புற வசதிகள் (குடிநீர், மின்இணைப்பு, வீட்டு உபயோகப் பொருள், வானம் போன்றவற்றையும் மூன்றாவது குழுவை பள்ளமான இடங்கள், தீப்பற்றக்கூடிய குடியிருப்புகள், கழிவுகள் சேரும் இடங்கள், பயிற் செய்துள்ள இடங்கள் போன்ற பேரிடர் பாதிப்பிற்கு உள்ளாகும் இடங்கள் / பொருள்கள் / கூட்டமைப்புகளையும், மேடான இடங்கள், பாதுகாப்பான இடங்கள், பாதுகாப்பான சாலைகள் போன்றவற்றையும் கண்டறிந்து பட்டியலிடும்படியும், மூன்றாவது குழு முன்பு இக்கிராமத்தைத் தாக்கியப் பேரிடர்களின் வகை அவை நடந்த ஆண்டு, பருவம், மீண்டும் மீண்டும் எத்தனை முறை தாக்கியது, அதன் தீவிரம் அதனால் ஏற்பட்ட பொருள் மற்றும் உயிர்சேதங்களின் எண்ணிக்கை, தாக்கிய பகுதிகள் போன்றவற்றை குறிக்கச் சொல்லவும்.

16. நான்கு குழுக்களின் இப்பணிக்குப் போதுமான கால அவகாசம் தரவும் பின்னர் ஒவ்வொரு குழுவிடமும் அவர்கள் வரைந்ததை சமர்பிக்கக் கூறவும், பங்கேற்பாளர்களின் சிறு வினாக்களுக்கு சமர்ப்பிப் பேரிடமிருந்து விளக்கம் பெறவும். வரைபடத்தயாரிப்வில் அவர்களின் அனுபவங்களையும் படிப்பினைகளையும் கூறச் செய்யவும்.

17. பின்னர் நான்கு வரைபடங்களையும் ஒன்றிணைத்து ஒரே வரைப்படமாக்கவும், இந்த வரைபடமே பேரிடர் மேலாண்மைக்கு திட்ட வரைபடம் என்பதை விளக்கிக் கூறவும்.

**பேரிடர் வரலாறு**

| வ. எண் | நிகழ்ந்த பேரிடர் | நிகழ்ந்த ஆண்டு | ஏற்பட்ட சேதங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | **சொத்து** | **உயிர்கள்** | | **சேதமடைந்த பொதுச் சொத்து** |
| 1 | வெள்ளம் (கன மழை) | 1972 ஐப்பசி மாதம் | 20 கூரை வீடுகள் 10 ஓட்டு வீடுகள் | 1 பெண் 2 குழந்தைகள் | 13 ஆண்டுகள் 1 மாடு | பாலம் உடைந்தது, சாலை அரிப்பு, குளம் உடைந்தது |
| 2 | வெள்ளம் (கன மழை) | 1685 கார்த்திகை மாதம் | 3 கூரை வீடுகள் 1 ஓட்டு வீடுகள் | - | 5 ஆடுகள் | சாலை அரிப்பு |
| 3 | புயல் | 1990 ஆவணி மாதம் | 60 கூரை வீடுகள் 40 ஓட்டு வீடுகள் 10 ஏக்கர் வாழை | 2 ஆண்கள் 1 பெண் | 17 மாடுகள் 5 ஆடுகள் | சாலை அரிப்பு மின் கம்பங்கள் பள்ளிக்கூடம் |

## 3. பணிக்குழுக்களுடனான ஒருங்கிணைப்பு (Co-ordination with Line Department)

பேரிடர் வரலாற்றிலிருந்து கிராமத்தின் பேரிடர் தாக்கும் வாய்ப்புகளையும் அதன் விளைவுகளையும் கண்டறிந்து நிர்ணயித்தபின், ஒரு பேரிடர் எச்சரிக்கையின் போது அல்லது பேரிடர் தாக்கத்தின் போது எந்த விதமான எதிர்வினைகள் தேவைப்படுகின்றன என்பதையும் அதற்கான சிறுசிறு நடவடிக்கைகள் எவை என்பதைப் பற்றியும் சிந்தித்துப் பட்டியலிட வேண்டும்.

செய்தி தெரிவித்தல், வெளியேற்றுதல் போன்ற எதிர்வினைகள் தம்முன் சிறுசிறு வேலைகளைக் கொண்டுள்ளன. அந்த வேலைகளை வரிசைப்பட உருவகித்துக் குறிப்பிட்ப் பேரிடரின் போது குறிப்பிட்டக் கிராமத்திற்கு எந்த விதமான வேலைகள் நடத்தப்பட வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். இந்த வேலைகள் பற்றியப் பட்டியலை உருவாக்குவது அக்கிராமத்திற்கு எத்தனைப் பணிக்குழுக்கள் தேவை என்பதையும், எந்த மாதிரியான பணிக்குழுக்கள் தேவை என்பதையும் முடிவு செய்யும்.

பேரிடர் சமிக்ஞைகளைக் கண்டறிதல் அதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தல், மற்றவர்களுக்கு தகவல் சாதனங்கள் மூலம் தெரிவித்தல், பாதுகாப்பு இடங்களைத் தயார்படுத்தல், மக்களைப் பாதுகாப்பிடங்களுக்கு கொண்டு செல்லல், தண்ணீர், எரிப்பொருள், உணவு, கழிப்பாறை வசதி செய்தல், நோய் தடுத்தல், சுகாதார ஏற்பாடுகளைக் கவனித்தல், காயம்பட்டவர்களை மீட்டல், முதலுதவி தருதல், வெளியேற்றுதல், இடிபாடுகளை நீக்குதல், சேதங்களை மதிப்பிடுதல், அரசு உதவிக்கு ஏற்பாடு செய்தல், ஆறுதல் செய்தல் போன்றவை பேரிடர் சூழலில் பொதுவாக தேவைப்படும் வேலைகளாகும்.

இவ்வேலைகளைத் தம்முன் தொடர்புள்ளவைகளை ஒன்றிணைத்து அவற்றை ஒருங்கிணைத்து செயல்பட ஏற்ற பணிக்குழுக்களை உருவாக்க வேண்டும். இப்பணிக் குழுக்களின் எண்ணிக்கை அக்கிராம பேரிடர்களின் வகையைப் பொருத்து அமையும்.

பேரிடர் வாய்ப்பிற்கு ஏற்பப் பணிக்குழுக்களை அமைக்க வேண்டும். பணிக்குழுக்கள் செய்ய வேண்டிய வேலைகளுக்கு ஏற்ப அதன் உறுப்பினர்கள் அமைய வேண்டும், உறுப்பினர் தகுதியை நிர்ணயிக்கும் போது சம்பந்தப்பட்ட பணிக்குழுவின் வேலைகளுக்கு அவரின் வயது, கல்வி நிலை, சமூக அந்தஸ்து, உடல்நிலை போன்ற கூறுகள் எந்த அளவிற்கு பங்களிக்கக் கூடும் எனக்கண்டு நியமிக்க வேண்டும்.

அதேபோல் பணிக்குழுக்களின் பொறுப்புகளும் வரையறுக்கப்பட்டு, குழுவின் அனைத்து உறுப்பினருக்கும் அது தெளிவாக எடுத்துரைக்கப்பட வேண்டும். பொதுவாக அனைத்து வித பணிக்குழுக்களிலும போதுமான எண்ணிக்கையில் பெண்கள் பிரதிநிதித்துவம் இருப்பது மிக முக்கியம். ஒதுக்கப்படல் நிகழாது இருக்க (Exclusion) தலித் போன்ற மக்கள் பிரிவினரையும் உட்கொண்டு வரவேண்டும்.

**செயல்முறை** :

1. பங்கேற்பாளர்களைக் கொண்டு பேரிடர் வாய்ப்பிற்கு ஏற்பத் தேவைப்படும் பணிக்குழுக்களை முடிவு செய்யவும்.
2. பணிக்குழுக்களின் வேலையின் தன்மைக்கு ஏற்பக் குழு உறுப்பினர்களை முடிவு செய்யவும்.
3. மனித வள பட்டியலைப் பயன்படுத்தி ஒவ்வொரு குழு உறுப்பினரையும் முடிவு செய்யவும்
4. பொருத்தமான தேவையான குழுக்களில் பெண்களை உறுப்பினர்களாக வைத்திருக்க அறிவுரை கூறவும்.
5. அரசு தொடர்பு கொள்ளும் குழுக்களில் அதிகாரம் பெற்றிருப்போரை உறுப்பினராக்கி நிறுவனத் தொடர்புகளை உருவாக்கவும்.
6. பின்னர் ஒவ்வொரு குழுவின் பொறுப்பினையும் அவர்களிடம் இருக்க வேண்டிய பொருள்கள் / தகவல்கள் போன்றவற்றை விவரிக்கவும். (எடுத்துக்காட்டு)

| குழு | பொறுப்புகள் | இருக்க வேண்டிய பொருள்கள் |
|---|---|---|
| தகவல் குழு | - தகவல் பெறுதல்<br>- தகவலைச் சரிபார்த்தல்<br>- தகவல் தரல்<br>- தகவல் சாதனங்களை பராமரித்தல் | - கிராம வரைபடங்கள்<br>- பேரிடர் மேலாண்மைத் திட்டம்<br>- அனைத்து தொடர்பு முகவரிகள்<br>- தகவல் தொலைபேசி எண்கள்<br>- வெளியேறும் தடங்கள்<br>- பாதுகாப்பான இடங்கள் பற்றிய விபரங்கள் |

**பணிகுழுக்கான பயிற்சிகள்**

ஒவ்வொரு பணிக்குழுவும் குறிப்பான வேலைகளை திறமையாகவும், சிறப்பாகவும் செய்ய பயிற்சிகள் மிகவும் தேவை. இப்பயிற்சிகள் தரம் வாய்ந்ததவையாகவும் தொடர்ந்து கிடைத்தும் வரவேண்டும். இப்பயிற்சிகளை பணிக்குழுக்களில் புதிதாக பொறுப்புக்கு வந்தவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இப்பயிற்சிகளை தலைமைப் பயிற்சி நிறுவனங்களிலிருந்து பெறுவதே கட்டுப்படியாகக்கூடியதும் மற்றும் நீடித்துச் செல்வதும் ஆகும்.

சுகாதாரத்துறை, தீயணைப்புத்துறை, அரசுத்துறைகள், செஞ்சிலுவைச் சங்கம் போன்றத் துறைகளையும் நிறுவனங்களையும் பயிற்சி மையங்களாகக் கொண்டு பணிக்குழுக்கள் பயிற்சியை ஏற்பாடு செய்ய வேண்டும்.

பல்வேறு கிராமத்தில் ஒத்த பணிக்குழுக்களை, ஒற்றைத்துப் பயிற்சி தருவது, பயிற்சியின் செலவை மிகக்குறைவாக வைத்துக் கொள்வதுடன், மிகக் குறுகிய காலத்தில், அதிய நபர்களுக்கு பயிற்சியை விரிவுபடுத்த முடியும்.

1. பங்கேற்பாளர்களைக் கொண்டு ஒவ்வொரு பணிக்குழுவிற்கும், அது ஆற்றவேண்டிய பொறுப்புகளைப் பொறுத்து எந்தவிதமான பயிற்சி தேவைகள் உள்ளன என முடிவு செய்யவும்.
2. இந்தப் பயிற்சித் தேவைகளை, எந்தப் பயிற்சி நிறுவனங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் நிறைவு செய்து கொள்ளலாம் என விவாதிக்கவும்.

3. பயிற்சி நிறுவனங்களில் முதன்மையானவற்றையும் அரசு துறைசார்ந்ததையும் முதன்மைப்படுத்தவும் இலவசமாக பயிற்சி தரும் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சேவை அமைப்புகளையும் இப்பட்டியல் இணைத்துக் கொள்ளவும்.
4. பயிற்சி பெறுவோருக்கான சரியான எண்ணிக்கையை முடிவு செய்யவும் இந்த எண்ணிக்கை வருவதற்கு வெவ்வேறு கிராமக்குழுக்களை ஒன்றுணைத்துப்
5. பயிற்சி நிறுவனங்கள் பயிற்சியளிக்கும் காலங்களை மனதில் கொண்டு குழுக்கான பயிற்சித் திட்டத்தினை தயாரிக்கவும்.
6. பயிற்சிகளுக்குப் பொறுப்பானர்களை நியமிக்கவும் அவர்களின் செயல்திட்டத்தைக் கண்காணிக்கவும்.